# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.57/2020

பிரதிவாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேமலதா பி.வா.சா.1 | | |
| க/பெ. | ராஜீ | | |
| கிராமம் | திருச்சி | தொழில் | |
| தாலுகா | திருச்சி டவுண் | வயது | 53 |

---

முதல் விசாரணை 22-06-2026.

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) 27.02.2008ம் தேதிய நம்மாழ்வார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 27.02.2008ம் தேதிய நம்மாழ்வார் நாயக்கர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் அசல் பி.வா.சா.ஆ.2 ஆக ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

(3) 07.01.2009 ம் தேதிய ஆதிநாராயணன் என்பவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 28.11.2002 ம் தேதிய நம்மாழ்வார் நாயக்கர் அழகர்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 28.11.2002 ம் தேதிய நம்மாழ்வார் நாயக்கர் போத்திராஜீக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) 21.10.1992 ம் தேதிய நம்மாழ்வார் நாயக்கர் கண்ணன், எல்லம்மாள் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) 03.10.2008 ம் தேதிய நம்மாழ்வார் நாயக்கர் ஆதிநாராயணனுக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(8) 28.04.2009 ம் தேதிய நம்மாழ்வார் நாயக்கரின் இறப்புச்சான்று சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

வாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.06.22 17:43:23 +0530